# திருப்பூர் மாநகராட்சி

**2021 ஜுலை மாதம் 05-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 52 முதல் 54**

**15-07-2021 -ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 55 முதல் 63**

**29-07-2021 -ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 64 முதல் 69**

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப..,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**<u>பொருள் அட்டவணை:</u>**

**52)** திருப்பூர் மாநகராட்சி தெருவிளக்குப் பிரிவில் மத்திய அமைச்சகத்தின் நகர்ப்புற வீட்டுவசதித் துறையின்அறிவிப்பின்படி AMRUT நகரங்களில் இருள் சூழ்ந்த பகுதிகளில் நிர்பயா நிதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிதியின் கீழ் உத்தேசிக்கப்பட்ட விபரங்கள், மின்திறன் மற்றும் எண்ணிக்கை விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண். | மண்டல எண் | வார்டு எண் | மின்விளக்கு திறன் | இடம் | எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | I | 3 | 20W | பிரியங்கா நகர் | 4 | 15 எண்கள் |
| | | | | S.P.K நகர் | 5 | |
| | | | | ஒட்டபாளையம் | 2 | |
| | | | | விஜயபுரி கார்டன் | 4 | |
| 2 | I | 12 | 20W | MGR காலனி | 4 | 15 எண்கள் |
| | | | | பாலமுருகன் நகர் | 6 | |
| | | | | சண்முகா நகர் | 3 | |
| | | | | VP சித்தன் நகர் | 2 | |
| 3 | I | 13 | 20W | ஸ்ரீவித்யா நகர் | 3 | 15 எண்கள் |
| | | | | மாஸ்கோ நகர் | 5 | |
| | | | | விவேகானந்தா நகர் | 5 | |
| | | | | குமரன் நகர் | 2 | |
| 4 | II | 17 | 20W | ஜே.பி. நகர் | 2 | 10 எண்கள் |
| | | | | கூத்தம்பாளையம் | 6 | |
| | | | | அண்ணா நகர் | 2 | |
| 5 | II | 18 | 20W | ஜேடர்பாளையம் | 2 | 10 எண்கள் |
| | | | | வாவிபாளையம் | 3 | |
| | | | | குருவாயூரப்பன் நகர் | 3 | |
| | | | | G.J. நகர் | 2 | |
| 6 | II | 19 | 20W | மூகாம்பிகை நகர் | 5 | 10 எண்கள் |
| | | | | சத்யா நகர் | 5 | |
| 7 | III | 32 | 20W | பாளையக்காடு | 4 | 20 எண்கள் |
| | | | | கருமாரம்பாளையம் | 11 | |
| | | | | சத்யா காலனி | 5 | |
| 8 | III | 32 | 72 W LED | மணியகாரம்பாளையம் | 20 | 20 எண்கள் |
| 9 | III | 36 | 20 W | கோவில்வழி | 6 | 15 எண்கள் |
| | | | | அமராவதிபாளையம் | 5 | |
| | | | | முத்தணம்பாளையம் | 2 | |
| | | | | மகாலட்சுமி நகர் | 2 | |

| வ. எண். | மண்டல எண் | வார்டு எண் | மின்விளக்கு திறன் | இடம் | எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 10 | III | 42 | 20 W | செரீப்காலனி | 5 | 15 எண்கள் |
| | | | | KRE லே-அவுட் | 5 | |
| | | | | கரட்டாங்காடு | 5 | |
| 11 | III | 41 | 20 W | சந்திராபுரம் | 10 | 15 எண்கள் |
| | | | | PAP காலனி | 5 | |
| 12 | III | 44 | 20 W | கோம்பைத் தோட்டம் | 5 | 15 எண்கள் |
| | | | | சுகுமார் நகர் | 5 | |
| | | | | கதிர் லே-அவுட் | 5 | |
| 13 | IV | 48 | 120W Poles, Cable, bracket | ஊத்துக்குளி சாலை Post Office to RVB | 8 | 8 எண்கள் |
| 14 | IV | 49 | 20W | தெற்கு தோட்டம் | 5 | 10 எண்கள் |
| | | | | வெடத்தலாங்காடு | 3 | |
| | | | | ABT ரோடு | 1 | |
| | | | | கருவம்பாளையம் | 1 | |
| 15 | IV | 50 | 20W | ராமையா கவுண்டர் லே-அவுட் | 3 | 10 எண்கள் |
| | | | | TMC காலனி | 4 | |
| | | | | அம்பேத்கார் நகர் | 3 | |
| 16 | IV | 52 | 20W | திருவள்ளுவர் நகர் | 5 | 15 எண்கள் |
| | | | | குமரன் நகர் | 5 | |
| | | | | வாய்க்கால் மேடு | 5 | |
| 17 | IV | 56 | 20W | கருவம்பாளையம்(மே) | 8 | 20 எண்கள் |
| | | | | செல்லம் நகர் | 2 | |
| | | | | KVR நகர் | 5 | |
| | | | | ஜீவா நகர் | 3 | |
| | | | | ஆலாங்காடு | 2 | |

| | | |
|---|---|---|
| 20WLED மின்விளக்குகள் | .. | 210 எண்கள் |
| 72W LED மின்விளக்குகள் | .. | 20 எண்கள் |
| 120W LED மின்விளக்குகள் cable, bracket & Poles | .. | 8 எண்கள் |

மேற்காண் பகுதிகளில் 20W LED மின்விளக்குகள் 210 எண்களும், 72W LED தெருவிளக்குகள் 20 எண்களும், மற்றும் 120W LED விளக்குகள் 8 எண்கள், தெருவிளக்கு கம்பங்கள் மின்பாதை அமைத்திடவும், மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்காண் தெருவிளக்குகள் நிர்பயா நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ.1/3606/2021)

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**53)** திருப்பூர் மாநகராட்சி அரசாணை எண்.380(டி)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (எப்.சி.) வழங்கல் துறை, நாள் 09-11-2020ம் ஆண்டு ரூ.295.25கோடியில் மக்கள் தொகை கணக்கில் மில்லியன் அளவில் அல்லாத 8 மாநகராட்சிக்கு ரூ.34,70,00,000/- 15-வது மத்திய நிதிக்குழுவின் கீழ் முதல் தவணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் எண்.ந.க.எண். 20452 / 2020 / LA-3 நாள் 10-11-2020-ல் மேற்காண் நிதிக்குழு பரிந்துரையில் இம்மாநகராட்சிக்கு ரூ.7,48,95,171/- இணைப்பு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேற்காண் செயல்முறையில் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி தேர்வு செய்யப்பட்ட பணிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | வேலையின் பெயர் | மொத்தம் ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | மண்டலம் - 1 பொது சுகாதார பிரிவிற்கு 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டி 100 எண்ணிக்கை வாங்குதல் | **50.00** |
| 2. | மண்டலம் - 2 பொது சுகாதார பிரிவிற்கு 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டி 100 எண்ணிக்கை வாங்குதல் | **50.00** |
| .3. | மண்டலம் - 3 பொது சுகாதார பிரிவிற்கு 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டி 100 எண்ணிக்கை வாங்குதல் | **50.00** |
| 4. | மண்டலம் - 4 பொது சுகாதார பிரிவிற்கு 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டி 100 எண்ணிக்கை வாங்குதல் | **50.00** |
| 5. | நீரேற்று மற்றும் நீருந்து நிலையங்களில் குளோரினேசன் பிளான்ட் குடிநீர் சுத்திகரிப்பு கருவி 9 இடங்களில் அமைத்தல் | **77.00** |
| 6. | நீரேற்று மற்றும் நீருந்து நிலையங்களில் குளோரினேசன் பிளான்ட் குடிநீர் சுத்திகரிப்பு கருவி 7 இடங்களில் அமைத்தல் | **60.00** |
| 7. | Bishop School மற்றும் Bharathiyar Complex ஆகிய மூன்றாவது குடிநீர் திட்ட 2நீருந்து நிலையங்களில் மின்செலவினத்தினை சிக்கனப்படுத்தி குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்துவதற்கு புதிய VT பம்பு செட்டுகள், மாற்று மோட்டார் மற்றும் தொலைதூர கண்காணிப்பு கருவி பொருத்துதல் | **86.00** |
| 8. | பூச்சக்காடு மற்றும் NRK puram உள்ள 2 நீரேற்று மற்றும் 2 நீருந்து நிலையங்களில் மின்செலவினத்தினை சிக்கனப்படுத்தி குடிநீர் விநியோகத்தினைமேம்படுத்துவதற்கு VTபுதிய பம்பு செட்டுகள், மாற்று மோட்டார் மற்றும் தொலைதூர கண்காணிப்பு கருவி பொருத்துதல் | **86.50** |
| 9. | ராயபுரம் மற்றும் பெரிச்சிபாளையம் மூன்றாவது குடிநீர் திட்ட நீருந்து நிலையங்களில் மின்செலவினத்தினை சிக்கனப்படுத்தி குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்துவதற்கு VT and ESBP புதிய பம்பு செட்டுகள், மாற்று மோட்டார் மற்றும் தொலைதூர கண்காணிப்பு கருவி பொருத்துதல் | **46.80** |

| | | |
|---|---|---|
| 10. | தென்னம்பாளையம் மற்றும் வினோபா நகர் 2 நீருந்து நிலையங்களில் மின்செலவினத்தினை சிக்கனப்படுத்தி குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்துவதற்கு VT புதிய பம்பு செட்டுகள், மாற்று மோட்டார் மற்றும் கண்காணிப்பு கருவி பொருத்துதல் மற்றும் VT Thennampalayam, Vinobhaji Nagar உள்ள 2 நீரேற்று மற்றும் 2 நீருந்து நிலையங்களில் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்துவதற்கு புதிய பம்பு செட்டுகள், மாற்று மோட்டார் மற்றும் தொலைதூர கண்காணிப்பு கருவி பொருத்துதல் | **70.00** |
| 11. | பொது சுகாதார 170 வாகனங்களின் இயக்கம் மற்றும் எரிபொருள் கண்காணிப்பு தொழில்நுட்ப கருவிகள் (Vehicle Track and Fuel Sensor) மற்றும் எரிபொருள் வாகனங்களின் இயக்கங்களின் விபரங்கள் வலைதளம் மூலம் நேரடி கண்காணிப்பு செய்தல் | **46.00** |
| 12. | தானியங்கி காணொளி மூலம் எடை மேடை அமைத்தல் மற்றும் கட்டுமான அறை அமைத்தல் | **43.00** |
| 13. | புதைநீர் வடிகால் மனிதக் குழிகளில் (Man hole) அடைப்பு நீக்குதல் சேறு மற்றும் சகதிகள் அகற்றுதல் பணிக்கு நான்கு கருவிகள் வாங்குதல் | **29.50** |
| 14. | பொது சுகாதார பிரிவில் 20 பிரிவு அலுவலகங்களில் பணியாளர்கள் வருகை கணிணி படுத்துதல் ( Bio Metric) | **4.22** |
| | **மொத்தம்** | **749.02** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ( இ.1 / 378 / 20201)

---------

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது**.

--------

**54)** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-5 அவர்களின் கடித எண்.8009 / ஜே1 / 2016 நாள் 28-03-2016 மற்றும் தலைமை செயலர், தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 32298 / பி1 /2016 நாள் 21-03-2019ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது,.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC)வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும் தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு மண்டலம் 1-க்கு 75 நபர்கள், மண்டலம் 2-க்கு 75 நபர்கள், மண்டலம் 3-க்கு 75 நபர்கள் மற்றும் மண்டலம் 4-க்கு 75 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு தினசரி மொத்தம் 300 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 01-07-2021 முதல் 30-09-2021 வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி

**54-ன் தொடர்ச்சி**

அடிப்படையில் (நாள் ஒன்றுக்கு ஒரு நாளுக்கு ரூ.355/-) மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்கள் . இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.85.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

.**அலுவலகக் குறிப்பு** :

**1.** செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரையுள்ள மூன்று மாதகாலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 300DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 2709 / 2021)

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

(ஒம்) கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப..,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப..,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**பொருள் அட்டவணை:**

**55)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 வரையுள்ள அனைத்து வார்டு பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திடக்கழிவுகளை குறைத்திடும், மறு சுழற்சி மற்றும் மீண்டும் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பணிக்காக வெளிச்சந்தை முறையில் 30 பரப்புரையாளர்கள், 4 மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர் ஆகிய 35 நபர்களை 16-09-2020-ந் தேதிய ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் 01-04-2021 முதல் 30-06-2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 26458 / 2016 / பி1, நாள் 26-02-2021-ல் உத்திரவு வழங்கப்பட்டது. அதன்படி பணி நீடிப்பு காலம் 30-06-2021வுடன் முடிவடைந்தது.

இந்நிலையில் திட்ட இயக்குநர் - தூய்மை இந்தியா திட்டம் (ம) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 26458 / 2016 / பி1, நாள் 06-07-2021-ல் மேற்படி பணிகளை புதிய குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 16-07-2021 முதல் 15-01-2022 வரை ஆறு மாத காலங்களுக்கு கோரி மேற்படி பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் வெளிச்சந்தை அடிப்படையில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பணியமர்த்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்களை நியமிக்க ஆறு மாதங்களுக்கு திருப்பூர் மாநகராட்சிக்கு ரூ.35,48,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| Category | Base rate fixed by committee as per TWAD SOR 2019-20 | EST @ 3.25% by Employer | EPF @ 8.33% by Employer | Remuneration cost per day in Rs. | Remuneration cost per Month (30days ) in Rs. | TDS @2% per Month | Service Provider Charges @ Maximum 10% per month | Total Cost per month (Rs) | Gross Budget for 6 months ( Rs.in lakh) | Allotted Man power |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| Animator (Minimum +2 Qualification) | 426 | 13.85 | 35.49 | 475.33 | 14259.92 | 285.20 | 1425.99 | 15971.11 | 0.96 | 30 |
| Supervisor (B.A. Sociology) | 584 | 18.98 | 48.65 | 651.63 | 19548.82 | 390.98 | 1954.88 | 21894.67 | 1.31 | 4 |
| Coordinator ( M.A. Sociology / MSW) | 638 | 20.74 | 53.15 | 711.88 | 21356.41 | 427.13 | 2135.64 | 23919.18 | 1.44 | 1 |

எனவே வெளிச்சந்தை அடிப்படையில் பணியாளர்களை நியமிக்க நிர்வாக அனுமதிக்கும். இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.35.48 இலட்சத்திற்கும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய உத்தேச செலவீனம் ரூ.3.00 இலட்சத்திற்கும் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

55-ன் தொடர்ச்சி

**அலுவலகக் குறிப்பு** :

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று 14-07-2021ந் தேதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 3757 / 2021)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**56)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் புதிதாக குடிநீர் குழாய் மற்றும் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் பணிகளால் சேதமடைந்த சாலைகளை தற்போது TNSUDP திட்டத்தின் கீழ் 15.238 கி.மீ.நீளமுள்ள சாலைகளை ரூ.11.84 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்ய மானியம், கடன் மற்றும் உள்ளாட்சி நிதி உதவியுடன் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு மேற்கொள்ள நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண் TNUDF / Projects / Tiruppur Roads நாள் 10-02-2021-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

**நிபந்தனைகள் விபரம்**

**1)** Amount of Grant : Rs. 5.80 Crores ( Rupees Five Crores and Eighty lakhs only)

**2)** Project : Road Improvement sub- Project in Tiruppur Corporation

**3)** Project Cost : Rs. 11.84

**4)** Financing plan :

| Sl.No. | Means of Finance | Amount (Rs. in crores) |
|---|---|---|
| 1. | Term Loan from TNUDF under World Bank assisted TNSUDP | 2.52 |
| 2. | Grant from project Sustainability Grant fund ( PSGF) under World Bank assisted TNSDUP | 5.80 |
| 3. | ULB contribution | 3.52 |
| | **Total Project Cost** | **11.84** |

**5) Completion Period**

The proposed Project should be completed within one year from the date of commencement of project.

**6) Last date of withdrawal**:

Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the loan shall cease on completion of three years from the date of execution of the Loan agreement.

**7) Special terms & Conditions**

**a) Procurement guidelines**

The ULB shall adhere to the provisions/ guidelines of the International Bank for Reconstruction and Development for procurement of works, goods and services. The ULB shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and others reports & documents as applicable from the TNUIFSL.

**b) Statement of Expenditure & Progress Reports**

The ULB shall contribute an amount of Rs.3.52 Crores (Rupees Three crores and fifty two lakhs only) as own contribution during the construction period.

**c) Environmental & Social Framework:**

The ULB shall implement the Project according to the Environmental and Social Management Framework (ESMF) prescribed by TNUIFSL

8) The ULB shall place the terms and conditions of capital Grant sanction before the council for acceptance and forward a certified copy of the resolution passed by the council with 90days from of receipt of this letter.

மேற்கண்ட நிதி ஆதாரங்களின்படி மானியம் பெற்று மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ருத் திட்டத்தின் கீழ் புதிதாக குடிநீர் குழாய் மற்றும் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் பணிகளால் சேதமடைந்த சாலைகளில் TNSUDP திட்டத்தின் கீழ் 15.238 கி.மீ.நீளமுள்ள சாலைகளை ரூ.11.84 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ.1 / 2835/ 2020)

-------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

--------

**57)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ருத் திட்டத்தின் கீழ் புதிதாக குடிநீர் குழாய் மற்றும் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் பணிகளால் சேதமடைந்த சாலைகளை தற்போது TNSUDP திட்டத்தின் கீழ் 15.238 கி.மீ.நீளமுள்ள சாலைகளை ரூ.11.84 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்ய மானியம், கடன் மற்றும் உள்ளாட்சி நிதி உதவியுடன் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு மேற்கொள்ள நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண் TNUDF / Projects / Tiruppur Roads நாள் 10-02-2021-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

**<u>நிபந்தனைகள் விபரம்</u>**

1) Amount of Loan : Rs. 2.52 Crores ( Rupees Two Crores and Fifty two lakhs only)
2) Project : Road Improvement sub- Project in Tiruppur Corporation
3) Project Cost : Rs. 11.84 crores
4) Principal Moratorium : 1 Year
5) Rate of interest : 8.60%
6) Repayment period : 6 years
7) Financing plan :

| Sl.No. | Means of Finance | Amount (Rs. in crores) |
|---|---|---|
| 1. | Term Loan from TNUDF under World Bank assisted TNSUDP | 2.52 |
| 2. | Grant from project Sustainability Grant fund ( PSGF) under World Bank assisted TNSDUP | 5.80 |
| 3. | ULB contribution | 3.52 |
| | **Total Project Cost** | **11.84** |

8) **Completion Period**

The proposed Project should be completed within one year from the date of commencement of project.

9) **Last date of withdrawal:**

Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the loan shall cease on completion of three years from the date of execution of the Loan agreement.

**10) Special terms & Conditions**

**a) Procurement guidelines**

The ULB shall adhere to the provisions/ guidelines of International Bank for Reconstruction and Development for procurement of works, goods and services. The ULB shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and others reports & documents as applicable from the TNUIFSL.

**b) ULB contribution**

The ULB shall contribute an amount of Rs.3.52 Crores (Rupees Three crores and fifty two lakhs only) as own contribution during the construction period.

**c) Operation & Maintenance**

The ULB shall operate and maintain the project assets in a good working condition and shall provide budgetary allocation every year for meeting the operation & maintenance cost from its general funds.

**d) Project Account**

The ULB shall open a separate “Project Account” for the sub-project assisted under TNSUDP in the book of accounts of the ULB.

**e) Loan from others**

The ULB shall not avail any fresh loans from banks, institutions or any other agency during the tenure of TNUDF’s Loan without obtaining prior written approval from TNUIFSL.

**f) Environmental & Social Framework**

The ULB shall implement the Project according to the Environmental and Social Management Framework (ESMF) prescribed by TNUIFSL

**g)** The ULB shall honour the debt service payment from their general fund on the respective due dates prescribed by TNUDF. If the ULB fails to honour the debt service on the respective due dates, the same shall be recovered from the State Finance Commission Devolution Grant through the Commissioner of Municipal Administration.

**11)** The ULB shall place the terms and conditions of Term Loan sanction before the council for acceptance and forward a certified copy of the resolution passed by the council.

**12)** The ULB shall enter into the following before availing the Term loan

i) Term loan agreement (Draft Loan Agreement is enclosed in the Annexure-1)

ii)Tripartite Agreement for operation of Designated Project Account (Draft Tripartite Agreement is enclosed in the Annexure-2)

**13)** This sanction should not be constructed as giving rise to any binding obligation on the part of TNUDF unless the ULB complete the loan documentation within 90 days from the date of receipt of this letter or such further time as may be allowed by TNUDF in its sole discretion.

மேற்கண்ட நிதி ஆதாரங்களின்படி கடன் பெற்று மற்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ருத் திட்டத்தின் கீழ் புதிதாக குடிநீர் குழாய் மற்றும் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் பணிகளால் சேதமடைந்த சாலைகளில் TNSUDP திட்டத்தின் கீழ் 15.238 கி.மீ.நீளமுள்ள சாலைகளை ரூ.11.84 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ.1 / 2835/ 2020)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**58)** திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல், குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் இயற்கை சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் ( TURIP) 2020-21-ன் கீழ் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.9025 / 2019 / E3. நாள் 15-02-2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு சாலைப் பணிகள் 5 சிப்பங்களாக தொகுக்கப்பட்டு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண்.686 /2021 /DO1, நாள் 16-02-2021-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி 5 பணிகளுக்கும் 25-02-2021 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி சிப்பம் எண்.1, வார்டு எண்.1-க்கு உட்பட்ட பட்டாளம்மன் கோவில் மேற்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.3-க்கு உட்பட்ட செல்லாண்டியம்மன் கோவில் வடக்கு குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் மறுதார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.4-க்கு உட்பட்ட நெட்டுசாலை பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் கான்கீரீட் தளம் அமைத்தல், வார்டு எண்.5-க்குட்பட்ட கல்யாண சுந்தரம் வீதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் மறு தார்தளம் அமைத்தல், வார்டு எண்.6-க்குட்பட்ட கே.ஆர்.ஜி. வீதியில் மறுதார்த்தளம் அமைத்தல், வார்டு எண்.7-க்கு உட்பட்ட ஏவிபி லே-அவுட் 3வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.8-க்கு உட்பட்ட கந்தசாமி லே-அவுட் 2வது வீதியில் தார்த்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.9-க்கு உட்பட்ட காமாட்சியம்மன் கோவில் தெற்கு வீதியில் தார்த்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.10-க்குட்பட்ட ஏவிபி லே-அவுட் 5வது வீதி மற்றும் காந்தி நகர் 5வது வீதி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் மறுதார்த்தளம் அமைத்தல், வார்டு எண்.15-க்குட்பட்ட சொர்ணபுரி என்க்ளேவ் 1-வது மற்றும் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.33-க்குட்பட்ட புதுக்கிணறு சாலையில் புதிதாக தார்தளம் அமைத்தல் பணிக்கு ( மதிப்பீட்டுத் தொகை ரூ.1,46,30,000/-) 25-02-2021 அன்று திரு V.P. அழகையயன், திரு K. வெங்கடாசலம், M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் திரு K.M.ராமசாமி ஆகிய நான்கு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்.

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 05-05-2021 அன்று(தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 அறிவிப்பு வெளியான காரணத்தால் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் முடிவுற்ற பின்பு) திறக்கப்பட்டு, உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த நான்கு ஒப்பந்ததாரர்களும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் திரு V.P. அழகையயன், திரு K. வெங்கடாசலம், M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் திரு K.M. ராமசாமி ஆகிய நான்கு ஒப்பந்ததாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 02-07-2021 அன்று திறப்பு செய்யப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

**58-ன் தொடர்ச்சி**

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு V.P.அழகைய்யன் | 1,15,17,693/- | மதிப்பீட்டு விலையை விட 10.05% குறைவு | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திரு K.வெங்கடாசலம் | 1,28,01,952/- | மதிப்பீட்டு விலையை விட 0.02% குறைவு | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 3. | M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 1,30,45,224/- | மதிப்பீட்டு விலையை விட 1.88% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 4. | திரு K.M. ராமசாமி | 1,30,64,742/- | மதிப்பீட்டு விலையை விட 2.04% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு V.P.அழகைய்யன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண். 11ல் குறிப்பிட்டுள்ள விலை மதிப்பீட்டுத் தொகையுடன் ஒப்பிடும் போது 25% அதிகமாகவும் ( 78.02% அதிகம்), மொத்த மதிப்பீட்டு விலையை காட்டிலும், 10.05% குறைவாகவும் உள்ளது. எனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் " Engineering Manual"-ல் Volume-I. பக்கம் எண்.8-ல் Clause 2.7.1ன் வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்படி திரு V.P. அழகைய்யன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கலாம் எனவும்,

மீதமுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு K. வெங்கடாசலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.02% குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதிக்கலாம். ( ம.எண்.1105 /2020-21/CE(CMA)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**59)** திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல், குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் இயற்கை சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP) 2020-21-ன் கீழ் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 9025/ 2019 / E3. நாள் 15-02-2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு சாலைப் பணிகள் 5 சிப்பங்களாக தொகுக்கப்பட்டு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண்.686 /2021 /DO1, நாள் 16-02-2021-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி 5 பணிகளுக்கும் 25-02-2021 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி சிப்பம் எண்.2, வார்டு எண்.16-க்கு உட்பட்ட சௌடாம்மன் கோவில் பின்புறம் தார்தளம் மறு சீரமைத்தல், வார்டு எண்.17-க்கு உட்பட்ட கூத்தம்பாளையம் OHT வீதியில் தார்தளம் மறுசீரமைத்தல், வார்டு எண்.18-க்கு உட்பட்ட பாரிவள்ளல் முதல் வீதியில் தார்தளம் மறுசீரமைத்தல், வார்டு எண்.19-க்கு உட்பட்ட மலர்பிரியா மருத்துவமனை சாலையில் தார்தளம் மறுசீரமைத்தல், வார்டு எண்.20-க்கு உட்பட்ட கணபதி நகர் 3-வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.21-க்கு உட்பட்ட தொட்டி மண்ணரை பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் புதிய தார்தளம்

**59-ன் தொடர்ச்சி**

அமைத்தல், வார்டு எண்.22-க்கு உட்பட்ட வ.ஊ.சி.நகர் 5-வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.23-க்கு உட்பட்ட என்.ஆ.ர்.கே.புரம் 3வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.24-க்கு உட்பட்ட டி.எஸ்.ஆர்.லே-அவுட் குறுக்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.25-க்கு உட்பட்ட சரவணா வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.26-க்கு உட்பட்ட நெசவாளர் காலனி 3-வது குறுக்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.27-க்கு உட்பட்ட எம்.எஸ்.நகர் 2-வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.28-க்கு உட்பட்ட பாரதிநகர் கிழக்கு சாலை மற்றும் குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல், வார்டு எண்.29-க்கு உட்பட்ட வ.ஊ.சி. நகர் 1-வது வீதியில் புதிய தார்தளம் அமைத்து மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் வார்டு எண்.30-க்குட்பட்ட ராஜா நகர் 1-வது வீதியில் (டேங்க் சாலை) மறு தார்தளம் அமைத்து மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.1,53,70,000/-) 25-02-2021 அன்று M/s. ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் திரு A. செந்தில்குமார் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்.

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 05-05-2021 அன்று (தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 அறிவிப்பு வெளியான காரணத்தால் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் முடிவுற்ற பின்பு) திறக்கப்பட்டு, உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் திரு A. செந்தில்குமார் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 02-07-2021 அன்று திறப்பு செய்யப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s. ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 1,42,11,668/- | மதிப்பீட்டு விலையை விட 5.31% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திரு A. செந்தில்குமார் | 1,44,38,339/- | மதிப்பீட்டு விலையை விட 6.99% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்ததால் 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிஅளித்திருந்த M/s.ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ்நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண்.1106 /2020-21 / CE (CMA) நாள் 02-07-2021-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 05-07-2021-ம் தேதிய கடிதத்தில் இனம் எண்.11-ல் ரூ.1500/-க்கு பதிலாக ரூ.1480/-க்கும், இனம் எண்.12-ல் ரூ.2000/-க்கு பதிலாக ரூ.1980/-க்கும், மற்றும் இனம் எண்.17-ல் ரூ.8850/-க்கு பதிலாக ரூ.8800/-க்கும், விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்டபின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு. ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (விலைக்குறைப்புக்கு பின்) | 1,41,67,728/- | மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகம் |

**59-ன் தொடர்ச்சி**

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணி திட்டப் பணியாக உள்ளதால், விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில்நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.98% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம். ( ம.எண். 1106 / 2020-21/CE(CMA)

-------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

--------

**60)** திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல், குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் இயற்கை சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டம் (TURIP) 2020-21-ன் கீழ் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 9025/ 2019 / E3. நாள் 15-02-2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு சாலைப் பணிகள் 5 சிப்பங்களாக தொகுக்கப்பட்டு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண்.686 / 2021 / DO1, நாள் 16-02-2021-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி 5 பணிகளுக்கும் 25-02-2021 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி சிப்பம் எண்.3, வார்டு எண்.31-க்குட்பட்ட அண்ணா நகர் வி.கே.ஆர்.தோட்டம் பகுதியில் தார்தளம் மேம்படுத்துதல், வார்டு எண்.32-க்குட்பட்ட முல்லைநகர் பிரதான வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.38-க்குட்பட்ட வி.ஐ.பி. கார்டன் 1-வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் வார்டு எண். 40-க்குட்பட்ட கே.என்.பி. சுப்பிரமணியம் நகர் வடக்கு 8வது, 9வது, 10வது வீதிகள் மற்றும் தெற்கு 9வது மற்றும் 10வது வீதிகள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.42-க்குட்பட்ட குறிஞ்சி நகர் விரிவு ( குங்கும மாரியம்மன் கோவில் கிழக்கு) பகுதியில் தார்தளம் மேம்படுத்துதல், வார்டு எண்.44-க்குட்பட்ட சொர்ணபுரி லே-அவுட் 2-வது வீதியில் தார்தளம் மேம்படுத்துதல் மற்றும் வார்டு எண்.45-க்குட்பட்ட பி.கே.ஆர்.காலனி பிரதான சாலையில் தார்தளம் மேம்படுத்துதல் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.1,42,90,000/-) 25-02-2021 அன்று M/s. சரஸ்வதி அன் கோ., மற்றும் M/s. ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்.

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 05-05-2021 அன்று (தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021அறிவிப்பு வெளியான காரணத்தால் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் முடிவுற்ற பின்பு) திறக்கப்பட்டு, உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப

**60-ன் தொடர்ச்சி**

தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் 10-05-2021-ந் தேதிய உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. சரஸ்வதி அன் கோ., மற்றும் M/s. ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 02-07-2021 அன்று திறப்பு செய்யப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s. சரஸ்வதி அன் கோ | 1,29,46,300/- | மதிப்பீட்டு விலையை விட 5.52% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | M/s. ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 1,31,61,819/- | மதிப்பீட்டு விலையை விட 7.28% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்ததால் மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s. சரஸ்வதி அன் கோ., நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண்.1107 / 2020-21/ CE (CMA) நாள் 02-07-2021-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தனது 05-07-2021-ம் தேதிய கடிதத்தில் இனம் எண்.9-ல் ரூ.2000/-க்கு பதிலாக ரூ.1970/-க்கும், இனம் எண்.13-ல் ரூ.8700/-க்கு பதிலாக ரூ.8650/-க்கும், விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்டபின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. சரஸ்வதி அன் கோ., (விலைக்குறைப்புக்கு பின்) | 1,28,74,840./- | மதிப்பீட்டு விலையை விட 4.94% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.94% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணி திட்டப் பணியாக உள்ளதால், விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில்நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.94% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

( ம.எண்.1107 /2020-21/ CE(CMA)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**61)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-1ல் வார்டு எண்.-10-க்குட்பட்ட குமார் நகர் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தென்மேற்கு மூலையில் மாணவ, மாணவியருக்காக தரைதளத்தில் புதியதாக ஒரு வகுப்பறை கட்டிடம் திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியின் மூலம் கட்டி

**61-ன் தொடர்ச்சி**

முடிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வகுப்பறையின் மேல் முதல்தளத்தில் ஒரு வகுப்பறையும், இரண்டாம் தளத்தில் ஒரு வகுப்பறையும் ஆக இரு வகுப்பறைகள் கட்ட இப்பள்ளியின் **பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர்** இசைவு தெரிவித்துள்ளனர். இதனை ஏற்று பள்ளியின் தலைமை ஆசிரியர் புதியதாக இரண்டு வகுப்பறைகள் ( முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் ) கட்டிக் கொள்ள அனுமதி கோரியுள்ளார். இத்துடன் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான மதிப்பீடு மற்றும் வரைபடத்தினை இத்துடன் இணைத்துள்ளனர். மேலும், கட்டிடத்தின் உறுதி சான்றிதழ், பொறியியல் கல்லூரி விரிவுரையாளரிடம் பெற்று கட்டிடத்தின் அளவுகளையும் மற்றும் அதற்கான வரைபடத்தையும் இணைத்துள்ளனர். எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம். (இ1/ 3240 / 2020 / ம.1)

-----

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**62)** திருப்பூர் மாநகராட்சியில் 2015-16, 2016-17, 2017-18ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட பணிகளின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 1% மற்றும் 5% தொகைகளை திரும்ப வழங்கக் கோரி கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பித்துள்ளனர். மேற்படி ஒப்பந்ததாரர்கள் பணி செய்து முடித்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே கீழ்கண்ட வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

திருவாளர்கள்

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கே.குப்புசாமி | 2150/- |
| 2. | ஆர்.சிவகுமார் | 31853/- |
| 3. | எஸ்.முத்துசாமி | 13145/- |
| 4. | கே,லோகநாதன் | 20250/- |
| 5. | எஸ்.ரஹமத்துல்லா | 344597/- |
| 6. | Helios | 109000/- |
| 7. | வி.பெரியசாமி | 287109/- |
| 8. | ஸ்ரீஅபிராமி இன்ஜினியரிங் | 212164/- |
| 9. | செந்தில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 116688/- |
| 10. | ஆர்.கிருஷ்ணன் | 47439/- |
| 21. | ஸ்ரீவேலவன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 244811/- |
| 22. | பி.ராமசாமி | 546800/- |
| 23. | A.ராஜேஷ்குமார் | 1172277/- |
| 24. | A. செந்தில்குமார் | 1893091/- |
| 25. | A. மதுரைவீரன் | 4038064/- |
| 26. | V. அக்வா இந்தியா | 1057315/- |

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 11. | BRIGAP | 2851933/- |
| 12. | ஸ்ரீவிஷ்ணு அன் கோ., | 50900/- |
| 13. | S. செல்வராஜ் | 18800/- |
| 14. | A. ஆறுச்சாமி | 145940/- |
| 15. | S.K. Construction | 54866/- |
| 16. | ஜெகன்னாதன் அன் கோ., | 5200/- |
| 17. | V.S.M கன்ஸ்ட்ரக்ச்ன்ஸ் | 21800/- |
| 18. | மதுரா இன்ஜினியரிங் | 1356817/- |
| 19. | R.A.U.S. Construction | 4912823/- |
| 20. | ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 3444764/- |
| 27. | ஸ்ரீகிருஷ்ணா Promoters | 695903/- |
| 28. | ராமச்சந்திரா எலக்ட்ரிக்கல்ஸ் | 85140/- |
| 29. | கோல்டன் இன்ஜினியரிங் | 56478/- |
| 30. | V.P அழகையன் | 2555723/- |
| 31. | ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 7000/- |
| 32. | T. ராமன் | 14955/- |

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம். ( பி.5 / 02935 / 2021)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**63)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 வரையுள்ள அனைத்து வார்டு பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திடக்கழிவுகளை குறைத்திடும், மறு சுழற்சி மற்றும் மீண்டும் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பணிக்காக 30 பரப்புரையாளர்கள், 4 மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர் போன்றவர்களை 16-07-2021 முதல் 15-01-2022 வரை ஆறு மாத காலங்களுக்கு ரூ.35,48,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு திட்ட இயக்குநர் தூய்மை இந்தியா திட்டம் - நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26458 / 2016 / P1, நாள்- 06-07-2021-ல் தெரிவிக்கப்பட்டதன்படி 07-07-2021-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 14-07-2021-ல் இரட்டை உறை முறையில் சேவை கட்டணத்திற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் 14-07-2021 அன்று பின்வரும் நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்தன.

1) M/s. Mirifical careers Pvt Ltd., Coimbatore
2) M/s. AMK Manpower Services, Nagercoil
3) M/s. Bharathi HR Consultancy, Coimbatore.

ஆகிய மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர். மேலும் M/s.AMK Manpower Services, Nagercoil என்ற நிறுவனத்தாரால் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி அளித்து அதன் நகல்களை ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் இணைத்து வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 14-07-2021 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு குழுவால் மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி வரப்பெற்ற மூன்று நிறுவனங்களில் M/s. AMK Manpower Services, Nagercoil மற்றும் M/s. Bharathi HR Consultancy, Coimbatore ஆகிய இரண்டு நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதிக்கான ஆவணங்களை இணைக்காததால் நிராகரிக்கப்பட்டது எனவும், M/s. Mirifical careers Pvt Ltd., Coimbatore என்ற நிறுவனம் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவால் 14-07-2021-ந் தேதியில் தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் M/s. Mirifical careers Pvt Ltd., Coimbatore நிறுவனத்தின் விலைவிகித உறை திறக்க அழைப்பு அளிக்கப்பட்டு 15-07-2021 அன்று 12.00P.M. ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்தார் / பிரதிநிதி முன்னிலையில் விலைவிகித உறை திறப்பு செய்யப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

M/s. Mirifical careers Pvt Ltd., Coimbatore

| Details | Qty | Basic Rate | TDS 2% | Service Charge Percentage | Service Charge Amount | Estimate Rate Per Month | Gross Budget for Six month | Total Amount / Six Month with Tax | Result |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Animator | 30 Nos | 14260.00 | 285.20 | 9.95% | 1418.87 | 15964.07 | 95784.42 | 2873532.60 | 0.04% Lesser than the Estimate Amount |
| Supervisor | 4 Nos | 19549.00 | 390.98 | 9.95% | 1945.13 | 21885.11 | 131310.63 | 525242.53 | |
| Coordinator | 1 No | 21356.00 | 427.12 | 9.95% | 2124.92 | 23908.04 | 143448.25 | 143448.25 | |
| **TOTAL** | | **55,165.00** | **1,103.30** | | **5,488.92** | **61,757.22** | **3,70,543.32** | **35,42,223.48** | |

**<u>63-ன் தொடர்ச்சி</u>**

மேற்படி M/s. Mirifical Careers Pvt.Ltd, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் சேவை கட்டணம், திட்ட இயக்குநர் தூய்மை இந்தியா திட்டம் - நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையைவிட 0.04%சதவீதம் குறைவாக உள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளலாம் என 15-07-2021 தேதியில் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மதிப்பீட்டு விலையைவிட 0.04% சதவீதம் குறைவாக உள்ளதால் வரப்பெற்ற குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

( எச்.1 / 3757 / 2021)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**.

--------

(ஒம்) கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப..,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப..,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**பொருள் அட்டவணை:**

**64)** திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.45-ல் பெரியகடை வீதியில் உள்ள மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு எதிரில் பழுதடைந்துள்ள பழைய வார்டு அலுவலக கட்டிடம் பயன்பாடின்றி புதுப்பிக்க இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட கட்டிடம் சுமார் 25 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டிடம் என்பதால் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத ஆபத்தான நிலையில் உள்ளது.மேற்கண்ட கட்டிடம் மேற்கூரை ஓடுகளால் அமைக்கப்பட்டு அனைத்தும் உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட கட்டிடம் கருங்கல் மூலம் கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். அந்த வளாகத்தின் அளவு 18.30 x 7.00m ஆகும்.அதில் பிரதான அறை 6.05 x 3.02m அளவும், முன்புறம் உள்ள தாழ்வாரம் 6.05 x 1.83m அளவும் மற்றும் பின்புறம் உள்ள தாழ்வாரம் 6.05 x 2.39m அளவும் உள்ளது. மேற்கண்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ1/ 04251 / 2021/ ம.3)

------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

--------

**65)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பகிர்மானக் குழாய் இல்லாத இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளுக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் மற்றும் குடிநீர் பகிர்மானத்தில் சீரான நீரழுத்தம் இல்லாத பகுதிகளுக்கும் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் குடிநீர் பகிர்மானத்தில் அவ்வப்போது பற்றாக்குறை ஏற்படும் இடங்களுக்கும் தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் ஒரு வருட ஒப்பந்தக் காலம் 31-07-2021 உடன் முடிவடைகிறது. புதிய ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் தேவைப்படுவதால் குடிநீர் பணி அத்தியாவசிய அவசரம் கருதி மேற்காண் ஒப்பந்தத்தினை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யலாம். மேலும் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யும் ஒரு மாத காலத்திற்கு ஆகஸ்ட் 2021 வரை அதே ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் அதே விலைவிகிதத்தில் குடிநீர் விநியோகிக்க ஒப்பந்ததாரர் ஒப்புதல் கடிதம் சமர்ப்பித்துள்ளார். எனவே 01-08-2021 முதல் 31-08-2021 முடிய ஒரு மாத ஒப்பந்த நீட்டிப்பு செய்ய[வும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/- அனுமதி கோரப்படுகிறது.

**<u>65-ன் தொடர்ச்சி</u>**

**அலுவலகக் குறிப்பு :**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் அத்தியாவசியம், பணி அவசர அவசியம் கருதி மாநகரில் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கும் பொருட்டு தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக் கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ.2 / 4041 / 2020)

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**66)** திடக்கழிவு மேலாண்மை பணியில் வார்டு எண்.16 முதல் 45 வரை (மண்டலம் 2 மற்றும் 3)பகுதிகளில் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தெடுத்தல், மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் இடத்திற்கு கொண்டு செல்லுதல் மற்றும் வடிகால்வாய்களை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை தனியார் மையம் மூலம் மேற்கொள்ளப்பட 12-08-2013ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மாமன்ற தீர்மான எண்.548 நாள் 30-08-2013-ல் திருவாளர். ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஸ்மெண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களுக்கு பணி உத்திரவு 02-09-2013-ல் வழங்கப்பட்டு அதன் பேரில் கடந்த 02-02-2014 முதல் பணி நடைபெற்று வருகிறது. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி மூன்றாண்டுகள் இந்த ஒப்பந்தப்புள்ளி மூலமே பணியினை மேற்கொள்ள 02-02-2015 முதல் 01-02-2017ம் ஆண்டு வரை நீடிப்பு செய்யப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை எண்.2.7.ன்படி ஒப்பந்தக் காலத்தை நீடிப்பு செய்யலாம். எனவே மாமன்றத் தீர்மான எண்.182, நாள் 22-12-2017-ல் 01-02-2018 முதல் 31-01-2020 வரை நீடிப்பு செய்ய அனுமதி அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. தற்போது மண்டலம் எண்.2 மற்றும் 3 வார்டு எண்கள் 22, 23, 24, 25, 26, 27, 28, 30. 31, 34,38,39, 40,42,44 மற்றும் 45 ஆகிய 16வார்டுகளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி 01-02-2020 முதல் 31-07-2020 ஆம் தேதி வரை ஆறு மாதத்திற்கு இந்த ஒப்பந்ததாரர் மூலமே இப்பணியினை மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மான எண். 867 நாள் 05-02-2020ல் அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது.

18-03-2020ஆம் நாளன்று கோவிட்-19 வைரஸ் தொற்று குறித்து தேசிய பேரிடராக மத்திய அரசு அறிவித்துள்ளது. மேலும் கொரோனா தொற்று அதிக அளவில் பரவி வருவதால் நோய் தொற்றை தடுக்கும் வகையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாததால் பொது சுகாதார நலன் கருதி திடக்கழிவு மேலாண்மை பணி அத்தியாவசிய பணியாக இருப்பதால் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு பணியினை அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் நோய் தொற்று பரவுதல் காரணமாக அரசு விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக(கோவிட்-19)ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தத்தின் அதே விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ள அதே நிறுவன ஒப்பந்ததாரருக்கு நிபந்தனை எண்.7.6.2-ன்படி ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீத உயர்வுடன் ஒரு நாளைக்கு 180 மெட்ரிக் டன் வீதம் மாதந்தோறும் வழங்கவேண்டும் என்பதாலும் ஒப்பந்தத்தினை அதே விலைவிகிதத்தில் 01-08-2020 முதல் 31-10-2020 வரை மூன்று மாத ‘காலத்திற்கு ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த கால நீட்டிப்பு செய்ய மாமன்ற தீர்மானம் எண்.1096 நாள் 30-07-2020-ல் அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. ஒப்பந்தப்புள்ளி கோர

<u>66-ன் தொடர்ச்சி</u>
கால அவகாசம் தேவைப்படுவதால் அதே ஒப்பந்ததாரருக்கு அதே விலைவிகிதத்தில் மீண்டும் மூன்று மாத காலத்திற்கு 01-11-2020 முதல் 31-01-2021 வரை கால நீட்டிப்பு செய்து பணி நடைபெற்று வந்தது.

ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தத்தின் அதே விலைவிகிதத்தில் 16 வார்டுகளில் பணி மேற்கொள்ள அதே நிறுவன ஒப்பந்ததாரருக்கு நிபந்தனை எண்.7.6.2-ன்படி ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீத உயர்வுடன் மெட்ரிக்டன் ஒன்றுக்கு ரூ.2565/-லிருந்து உயர்வு செய்து ரூ.2821.50 வீதம் சராசரியாக ஒரு நாளைக்கு 180 மெ.டன் வீதம் மாதந்தோறும் வழங்க வேண்டும் என்பதாலும் ஒப்பந்தத்தினை அதே விலைவிகிதத்தில் 01-02-2021 முதல் 31-07-2021 வரை ஆறுமாத காலத்திற்கு ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்சமயம் கொரோனா நோய் தொற்று காலமாக உள்ளதாலும், மீண்டும் ஐந்து மாத காலத்திற்கு 01-08-2021 முதல் 31-10-2021 வரை ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தத்தின் அதே விலைவிகிதத்தில் 16 வார்டுகளில் பணி மேற்கொள்ள அதே நிறுவன ஒப்பந்ததரருக்கு கால நீட்டிப்பு வழங்கவும்,அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.50 கோடிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) கொரோனா நோய் தொற்று காரணமாக தற்போது ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத காரணத்தினாலும், அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு, தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு குப்பைகளை உடனுக்குடன் அகற்ற ஏற்கனவே 12-08-2013ம் தேதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் 01-08-2021 முதல் 31-10-2021 வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ய மாமன்ற அனுமதி வழங்கலாம்.

( இ.1 / 6901 / 2019)

-------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

--------

**67)** திருப்பூர் மாநகராட்சியில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினர் (NTADCL) மூலம் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்டு கடந்த 2009 செப்டம்பர் முதல் பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 119 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது.(Gravity Collection System)இதில் ஒரு பகுதியாக திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.2, வார்டு எண்.27-க்குட்பட்ட பாரதி நகரில் கழிவுநீரேற்று நிலையம் (SPS-3)அமைக்கப்பட்டு வார்டு எண்கள்.8,9,10,26 மற்றும் 27 ஆகிய பகுதிகளில் தினசரி சேகரமாகும் பாதாள சாக்கடைத் திட்ட கழிவுநீரை மேற்கண்ட SPS-3 யிலிருந்து 3500 மீட்டர் தூரம் Pumping செய்யப்பட்டு வார்டு எண்.31-ல் மின்மயானம் அருகில் உள்ள ஒருங்கிணைந்த SPS-4க்கு கொண்டு சென்று பின்பு STPக்கு Pumpimg செய்யப்பட்டு சுத்திகரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில் பாரதிநகர் SPS-3--யிலிருந்து கொங்கு பிரதான சாலையில் அமைக்கப்பட்டுள்ள Manhole – 94 வரை 500mm விட்டமுள்ள கண்ணாடி இழை (GRP) குழாய் மூலம் Pumping Main ஆக 1272 மீட்டர் தூரமும், மேற்கண்ட Manhole எண்.94-லிருந்து கொங்கு பிரதான சாலை வழியாக ஊத்துக்குளி சாலையை கடந்து SPS-4 வரை 600mm விட்டமுள்ள RCC குழாய் மூலம் Gravity Collection System ஆக 2228 மீட்டர் தூரமும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**67-ன் தொடர்ச்சி**

மேற்கண்ட கொங்கு பிரதான சாலையில் பதிக்கப்பட்டுள்ள RCC குழாயில் பாதியளவு மட்டுமே நீரோட்டம் உள்ளதினால் Oxidizing of H2S gas-ன் எதிர்வினை காரணமாக மேற்பரப்பில் அரிப்பு ஏற்பட்டு குழாய் அடிக்கடி உடைந்து சாலையில் கழிவுநீர் வழிந்தோடுகிறது. அவ்வப்பொழுது மாநகராட்சி பொதுநிதியின் மூலம் உடைந்த பகுதியை மட்டும் சரி செய்யப்படுகிறது. முழுவதையும் மாற்றி அமைக்கும்அளவிற்கு மாநகராட்சியில் நிதி ஆதாரம் இல்லை என்பதாலும்,

மேலும் தற்சமயம் மேற்கண்ட சாலையில் மிடுக்கான நகரத் திட்டத்தின் (Smart City Mission)கீழ் கொங்கு பிரதான சாலையை கான்கீரீட்சாலையாக மாற்றி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதினால் எதிர்வரும் காலங்களில் குழாய் உடைந்தால் சரி செய்ய முடியாத நிலை ஏற்படுவதை கருத்தில் கொண்டு 600mm விட்டமுள்ள CI குழாய்கள் மிடுக்கான நகரத்திட்ட பணிகள் (Smart City Mission)நடைபெற்று வரும் பகுதியில் மட்டும் 1500மீ தூரம் மாற்றி அமைக்க 2020-2021ம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரிய விலைப்புள்ளியின் அடிப்படையில் ரூ.3.80 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதிக்கலாம் (இ1/1624/2021/ம.2)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**68)** திருப்பூர் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் சீர்மிகு சாலைகள் அமைக்கும் பணியானது மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது. அந்த பணிகளில் சிப்பம் 6-க்குட்பட்ட வார்டு எண்.60-ல் காந்திஜி பிரதான சாலையில் 0.530 கி.மீ. நீளத்திற்கும், வார்டு எண்.60-ல் குமரன் பிரதான சாலையில் 0.620 கி.மீ. நீளத்திற்கும், வார்டு எண்.60-ல் எஸ்.ஆர்.நகர் தெற்கு 60அடி சாலையில் 0.550கி.மீ. நீளத்திற்கும் சீர்மிகு சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

மேற்படி சிப்பத்தின் கீழ் பகுதிப் பணிகள் முடிவுற்றது. கான்கீரீட் சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பொழுது மதிப்பீட்டில் சில இனங்கள் கூடுதலாக உள்ளது. மேலும் சீர்மிகு சாலைக்கு அருகில் உள்ள பல இணைப்பு சாலைகள் தற்பொழுது அம்ரூத் திட்டத்தின் கீழ் குழாய்கள் பதித்து மிகவும் சேதமடைந்தும் சாலைகள் இல்லாமலும் உள்ளது. எனவே மேற்படி சிப்பத்தின் கூடுதலாக இனங்கள் M-25 கான்கீரீட் மற்றும் M-40 கான்கீரீட் ஆகியவற்றை கொண்டு சீர்மிகு சாலையின் அருகில் உள்ள சேதமடைந்த இணைப்பு சாலைகளான 1) காந்திஜி 6-வது குறுக்கு வீதி 0.179கி.மீ, 2) நேதாஜி முதல் மற்றும் குறுக்கு வீதி 0.224 கி.மீ, 3) நேதாஜி இரண்டாவது வீதி 0.135 கி.மீ, மற்றும் மூன்றாவது வீதி 0.135 கி.மீ, ஆகியவற்றில் கான்கீரீட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள அனுமதியும் மேலும் அதற்கான செலவினத் தொகை ரூ.39.00இலட்சத்தை மூலமதிப்பீட்டிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். ( இ1/6630 - I ( II-6) 2017 )

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**69)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-ல் வார்டு எண்.10-க்குட்பட்ட பத்மாவதிபுரம் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தலைமையாசிரியர் அறைக்கு கிழபுறம் அமைந்துள்ள வடக்கு பார்த்த கட்டிடத்தின் முதல் தளத்தில் புதியதாக மாணவ, மாணவியருக்காக மூன்று வகுப்பறைகளை திருவாளர்கள் பிரைம் டெக்ஸ் நிறுவனம், திருப்பூர் மூலம் கட்டித் தர இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் இசைவு தெரிவித்துள்ளனர். இதனை ஏற்று பள்ளியின் தலைமையாசிரியர் அறைக்கு கிழபுறம் அமைந்துள்ள வடக்கு பார்த்த கட்டிடத்தின் முதல் தளத்தில் புதியதாக மூன்று வகுப்பறைகள் (முதல் தளம்) கட்டிக் கொள்ள இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் அனுமதி கோரியுள்ளனர். இத்துடன் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.33.50 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு மற்றும் வரைபடம் திருவாளர்கள் வேணு கன்ஸ்ட்ரக்சன், திருப்பூர் நிறுவனத்தினரால் தயார் செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது மற்றும் பொறியியல் கல்லூரி விரிவுரையாளரிடம் பெற்ற கட்டிடத்தின் உறுதிச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் மூலம் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதி வழங்கலாம். (இ1 /3240 /2020-21 /ம-1)

-----------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

(ஒம்) கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப..,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி